PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.12 08:24:29 +0530

# Copy of Deposition

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண் : 42/2021**

**வாதிதரப்பு சாட்சி:1**

பெயர்:சுப்ரமணியம் (வா.சா.1 ) நாள்:12.08.2025

த.பெ:

**2025ம்** ஆண்டு ஆகஸ்ட் **மாதம் 12ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் சு.,ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா1 – குறுக்கு விசாரணை தொடர்ச்சி(4ம் பிரதிவாதி தரப்பு):-**

தாவா சொத்து எனது பெயரில் உள்ளதை காட்ட ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் யார் பெயரில் உள்ளது என்றால் எனது அம்மா ராஜம்மாள் பெயரில் உள்ளது. தாவா சொத்தில் உள்ள வீடு பழைய ஓட்டு வீடு என்றால் சரிதான். அந்த வீடு கட்டி சுமார் 60 வருடங்கள் இருக்கும் என்றால் இல்லை சுமார் 100வருடங்கள் இருக்கும். தாவா சொத்து முழுவதும் வீடு தான் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் சமையலறை, படுக்கையறை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் மின் இணைப்பு எண்.114 என்றால் சரிதான். அந்த வீடு யார் காலத்தில் கட்டப்பட்டது என்றால் எனது அப்பா மாரி நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகும். மின் கட்டண இரசீதும் மாரிநாயக்கர்

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.08.12 08:24:41 +0530

பெயரில் தான் உள்ளது என்றால் இல்லை என்பெயரில் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் எனது அப்பா பெயரிலான மின்கட்டண இரசீது பற்றி எனக்கு எதுவும்தெரியாது.

2. இன்றைக்கும் தாவா சொத்திற்கு உண்டான மின்கட்டணம் எனது அப்பா மாரிநாயக்கர் பெயரில் தான் செலுத்தப்பட்டுவருகிறது என்றால் சரியல்ல. எனது பெயரில் தாவா சொத்தில் இருக்கும் வீட்டிற்கு மின் கட்டண இரசீது மின்கட்டணம் செலுத்தியதற்கான இரசீது ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது எவ்வளவு விலைக்கு போகும் என்றால் சுமார் ரூ.2,00,000/- முதல் ரூ.2,50,000/- வரை போகும். மாரிநாயக்கர் எந்த தேதி, மாதம், வருடம் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. மாரிநாயக்கர் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாவா சொத்து மாரிநாயக்கருக்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். மாரிநாயக்கரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்தால் தான் வாரிசு விவரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல.

3. மாரிநாயக்கரின் குடும்பத்திற்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்களும் இருந்தது என்றால் சரிதான். 1972ம் வருடம் தான் அனைவரும் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். 1983ல் மாரிநாயக்கர் ஒரு உயில்சாசனம் எழுதிகொடுத்தார் என்றால் அதுபற்றி தெரியாது. 1972ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை படியும், 1983ல் ஏற்பட்ட உயில்சாசனம் படியும், 4ம் பிரதிவாதியும், முருகேசனின்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2025.08.12
08:24:46 +0530

வாரிசுகளும் சேர்ந்து தான் ஒரு பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை ஆவணத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அ.வ.எண்.745/2018ன் படி பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2ன் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் தேவைப்பட்டால் தருகிறேன்.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் சொத்து விவரத்தில் சுமார் அரைசென்டில் உள்ள காலியிடம் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1படி தனி வீடு, கட்டிடம், மின்இணைப்பு, கதவு எண் ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சுமார் அரைசென்ட் என்பது தோராயமான அளவு என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணப்படி நான்கு நபர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளதாக அதில் கண்டுள்ளப்பட்டது என்றால் சரிதான், நான்கு நபர்களும் சேர்ந்து எனது அம்மாவிற்கு எழுதிவைத்தார்கள். இந்த வழக்கில் தாவா சொத்து மாரிநாயக்கருக்கு தனிப்பட்ட சொத்து என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் படியான சொத்தும், தாவா சொத்தும் வேறு வேறானவை என்றால் சரியல்ல. தாவா சொத்து மாரிநாயக்கருக்கு தனிப்பட்ட சொத்து என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. மாரிநாயக்கரும், அவரது வாரிசுகள் அனைவரும்சேர்ந்து ராஜம்மாள்

என்பவருக்கு தாவா சொத்தை ஏற்படுத்தி கொடுத்ததாக வா.சா.ஆ.1ல் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவாவில் சொன்னமாதிரி மாரிநாயக்கரோ, அவரது வாரிசுகளோ சேர்ந்து தாவா சொத்தை ராஜம்மாள் என்பவருக்கு எழுதிகொடுத்ததாக எந்தவித செட்டில்மென்ட் ஆவணமும் ஏற்படுத்தி தரவில்லை என்றால் சரிதான் ஆனால் நாங்கள் நான்கு பேர் தான் எழுதி கொடுத்தோம். வா.சா.ஆ.1 ல் உள்ள சொத்தும், தாவா சொத்தும் வேறு வேறு. மாரிநாயக்கர் அந்த மாதிரி எந்த செட்டில்மென்ட்-ம் எழுதிகொடுக்கவில்லை என்றாலும், தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.08.12 08:24:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.